# டிசம்பர்–23 –திருவருகைக்காலநான்காம் ஞாயிறு

**“ ஆண்டவர் உமக்குச் சொன்னவை நிறைவேறும் என்று நம்பிய நீர் பேறுபெற்றவர்” (லூர்க்.1:45)**

---

## முதல் வாசகம் : மீக்கா 5 : 1 – 4

அரண்சூழ் நகரில் வாழும் மக்களே! உங்கள் மதில்களுக்குப் பின்னால் ஒளிந்து கொள்ளுங்கள் உங்களுக்கு எதிராக முற்றுகையிடப்பட்டுள்ளது இஸ்ரயேலின் ஆளுநன் கோலால் கன்னத்தில் அடி பெறுவான். நீயோ, எப்ராத்தா எனப்படும் பெத்லகேமே! யூதாவின் குடும்பங்களுள் மிகச் சிறியதாய் இருக்கின்றாய்! ஆயினும், இஸ்ரயேலை என் சார்பாக ஆளப் போகின்றவர் உன்னிடமிருந்தே தோன்றுவார் அவர் தோன்றும் வழி மரபோ ஊழி ஊழிக் காலமாய் உள்ளதாகும். ஆதலால், பேறுகால வேதனையில் இருப்பவள் பிள்ளை பெறும்வரை அவர் அவர்களைக் கைவிட்டு விடுவார் அதன் பின்னர் அவருடைய இனத்தாருள் எஞ்சியிருப்போர் இஸ்ரயேல் மக்களிடம் திரும்பி வருவார்கள். அவர் வரும்போது, ஆண்டவரின் வலிமையோடும் தம் கடவுளாகிய ஆண்டவரது பெயரின் மாட்சியோடும் விளங்கித் தம் மந்தையை மேய்ப்பார் அவர்களும் அச்சமின்றி வாழ்வார்கள் ஏனெனில், உலகின் இறுதி எல்லைகள்வரை அப்போது அவர் மேன்மை பொருந்தியவராய் விளங்குவார்

**பதில்பாடல் :** கடவுளே எம்மை மீட்குமாறு உமது திருமுக ஒளியைக் காட்டியருளும்.

## இரண்டாம் வாசகம் : எபிரேயர் 10 : 5 – 10

சகோதர சகோதரிகளே கிறிஸ்து உலகிற்கு வந்தபோது, ”பலியையும் காணிக்கையையும் நீர் விரும்பவில்லை, ஆனால் ஓர் உடலை எனக்கு அமைத்துத் தந்தீர். எரிபலிகளும் பாவம் போக்கும் பலிகளும் உமக்கு உகந்தவையல்ல. எனவே நான் கூறியது. என் கடவுளே, உமது திருவுளத்தை நிறைவேற்ற, இதோ வருகின்றேன். என்னைக் குறித்துத் திருநூல் சுருளில் எழுதப்பட் டுள்ளது” என்கிறார். திருச்சட்டப்படி செலுத்தப்பட்ட போதிலும் ”நீர் பலிகளையும் காணிக்கையையும் எரிபலிகளையும் பாவம்போக்கும் பலிகளையும் விரும்பவில்லை இவை உமக்கு உகந்தவையல்ல” என்று அவர் முதலில் கூறுகிறார். பின்னர் ”உமது திருவுளத்தை நிறைவேற்ற, இதோ வருகின்றேன்” என்கிறார். பின்னையதை நிலைக்கச் செய்ய முன்னையதை நீக்கிவிடுகிறார். இந்தத் திருவுளத்தால்தான் இயேசு கிறிஸ்து ஒரே ஒருமுறை தம் உடலைப் பலியாகச் செலுத்தியதின் மூலம் நாம் தூயவராக்கப் பட்டிருக்கிறோம்.

## நற்செய்தி : லூக்கா 1 : 39 - 45

அக்காலத்தில் மரியா புறப்பட்டு யூதேய மலைநாட்டிலுள்ள ஓர் ஊருக்கு விரைந்து சென்றார். அவர் செக்கரியாவின் வீட்டை அடைந்து எலிசபெத்தை வாழ்த்தினார். மரியாவின் வாழ்த்தை எலிசபெத்து கேட்டபொழுது அவர் வயிற்றிலிருந்த குழந்தை மகிழ்ச்சியால் துள்ளிற்று. எலிசபெத்து தூய ஆவியால் முற்றிலும் ஆட்கொள்ளப்பட்டார். அப்போது அவர் உரத்த குரலில், ”பெண்களுக்குள் நீர் ஆசி பெற்றவர் உம் வயிற்றில் வளரும் குழந்தையும் ஆசி பெற்றதே! என் ஆண்டவரின் தாய் என்னிடம் வர நான் யார்? உம் வாழ்த்துரை என் காதில் விழுந்ததும் என் வயிற்றினுள்ளே குழந்தை பேருவகையால் துள்ளிற்று. ஆண்டவர் உமக்குச் சொன்னவை நிறைவேறும் என்று நம்பிய நீர் பேறுபெற்றவர்” என்றார்.

**தியானம்:** திருவருகைக்காலத்தின் நான்காவது ஞாயிறுவார இறைவார்த்தைப் பகுதிகள் கடவுளின் வாக்குறுதிகளை முற்றுமுழுதாக நம்பி அதற்கேற்ப வாழ்வதே நம் கிறிஸ்தவ விசுவாச வாழ்வு என்பதை தெளிவுபடுத்துகின்றது. கடவுள் சொன்னவை நிறைவேறும் என நம்பி கீழ்ப்படிந்தார் மரியன்னை. இன்று எம் எல்லோரினதும் அன்னையாக திகழ்கின்றார். தெய்வீக மீட்புத்திட்டத்தில் மரியாவின் தனித்துவமான பங்கையும், பணியையும் தியானிக்க நாம் அழைக்கப்படுகின்றோம். இன்றைய முதல் வாசகத்தில் மீக்கா அவருடைய காலத்தில் இஸ்ராயேலரை பார்க்கின்றார். அவர்களுடைய இருள் சூழ்ந்த வாழ்வில் மெசியா என்னும் ஒளியைப் பார்க்க அவரது விசுவாசம் உதவுகிறது. “கடவுள் நம்மோடு” என்னும் மறைபொருள் “உமது சொற்படியே ஆகட்டும்” என்று சொன்ன வார்த்தையை மரியா உச்சரித்தார். அது நிறைவேறியது. காரணம் அன்னை மரியா தம்மை வெறுமையாக்கி தமது விருப்பு வெறுப்புக்களை துறந்து கடவுளின் திட்டத்திற்கு தம்மை கையளித்தார். ஆனால் நாமோ நமது ஆசைகளை நிறைவேற்றி அதில் சுகம் காண விரும்புவதால் இவ் விருப்பம் எம்மிடமிருந்து எதிர்பார்க்கும் தியாக உணர்வை அந்த ஆசைக்குள் புதைத்து விடுகிறோம். தனக்கு வரக்கூடிய அவமானம், ஆபத்துக்கள், புறக்கணிப்பு யாவையும் தாங்கி இறைவிருப்பத்திற்கு தன்னை அர்ப்பணித்த மரியன்னை எம் எல்லோருக்கும் ஒரு முன்மாதிரிகை. அவரை நாமும் பின்பற்றி நடப்போமானால் அவரோடு கூட வல்லவராம் கடவுள் எனக்கு அரும் பெரும் செயல்கள செய்துள்ளார்” என்று பாடலாமல்லவா.